வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 11.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

2 நாள் அரசு முறைப் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மொரீஷியஸ் நாட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

பஞ்சாப் மத்திய பல்கலைக் கழகம், இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களின் சங்கமம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப் பேரவையில் 2025-26ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி நாளை தாக்கல் செய்ய உள்ளார்.

புதுச்சேரியில் பெஞ்சல் புயல் நிவாரணம் முழுமையாக வழங்கியதாக பேரவையில் பொய்யான தகவல் அளித்தாக கூறி, திமுக-காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவையில் இருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

---

*மோடி 1 (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று மொரீஷியஸ் நாட்டிற்கு புறப்பட்டு சென்றார். அவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் அவரை மொரீஷியஸ் நாட்டு பிரதமர் திரு. நவீன் சந்திர ராம்கூலம் வரவேற்றார். பின்னர் விமான நிலையத்தில் திரண்டு இருந்த இந்திய

வம்சாவளியினர் பிரதமரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதனை தொடர்ந்து, பாரம்பரிய அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக் கொண்டார். மொரீஷியசில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மொரீஷியசில் இந்திய சமூகத்தினர் தமக்கு அளித்த அன்பான வரவேற்பு குறித்து மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்துள்ளார். இந்திய பாரம்பரிய கலாச்சாரம், மற்றும் மதிப்புகள் மீதான அவர்களின் வலுவான தொடர்பு உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக பிரதமர் தெரிவித்தார். வரலாறு மற்றும் இதயத்தின் இந்த பிணைப்பு, தலைமுறைகளை கடந்து தொடர்ந்து செழித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். இந்த பயணத்தின் போது திறன் மேம்பாடு முதல் சமூகம் சார்ந்த உள்கட்டமைப்பு வரை இந்தியா நிதியளிக்கும் 20க்கும் மேற்பட்ட திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

மோடி 2 (5)

இந்த பயணத்தின் போது, மொரீஷியசின் 57ஆவது தேசிய தின கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொள்வார். இந்த பயணத்தின் திறன் மேம்பாடு, வர்த்தகம், மற்றும் எல்லை தாண்டிய பல்வேறு பிரச்சனைகள் ஆகியவை தொடர்பான ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கையெழுத்திடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

---------------------------

குடியரசுத் தலைவர் 1 (16)

பஞ்சாப் மத்திய பல்கலைக் கழகம், இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களின் சங்கமம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். 2 நாள் அரசு முறைப் பயணமாக பஞ்சாப் மற்றும் சண்டிகருக்கு சென்றுள்ள அவர், இன்று, பதிந்தாவில் உள்ள பல்கலைக்கழகத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசினார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

குடியரசுத் தலைவர் 2 (17)

பஞ்சாப் மத்திய பல்கலைக் கழகத்தில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று வருவது குறித்து, குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார். இந்தியாவின் பண்முகத் தன்மை பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் பிரதிபலிப்பதாக அவர் தெரிவித்தார். அறிந்து கொள்வதற்கான ஆர்வம், தனித்தன்மை, ஒழுக்கம், தொலை நோக்குப் பார்வை மற்றும் தன்னம்பிக்கையுடன் சுயமாக செயல்படுதல் ஆகிய 5 நல்ல அம்சங்களை மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இத்தகைய நிறுவனங்கள் நமது நாட்டின் துடிப்பான மற்றும் வளமான கலாச்சாரத்தின் பிரதிநிதித்துவ நிறுவனங்களாகும் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார். பட்டமளிப்பு விழாவில், ஆயிரத்து 31 முதுகலை பட்டங்கள், 60 முனைவர் பட்டங்கள், மற்றும் 43 தங்கப்

பதக்கங்களையும் அவர் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு வழங்கினார். நிகழ்ச்சியை தொடர்ந்து அவர் தல்வண்டி சாபோவில் நிறுவப்பட்ட தகாத் ஸ்ரீ தம்தாமா சாஹிப்பை பற்றி குறிப்பிட்டார். ஸ்ரீகுரு கோபிந்த் சிங் ஜி, தனது தீவிர போராட்டத்தின் போது சிறிது காலம் இங்கு செலவிட்டதாகவும் அவர் கூறினார். உலகின் மிகவும் புனிதமான புனித

*குடியரசுத் தலைவர் 3 (5)*

யாத்திரை தலத்தின் ஆன்மீக ஆற்றல் இங்கே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் 72ஆவது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்று, மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்க உள்ளார்.

---------------------------

*ஜெய்சங்கர் (12)*

இந்தியாவிற்கும் ஆர்மேனியாவிற்கும் இடையிலான உறவுகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். டெல்லியில் நேற்று ஆர்மேனியா வெளியுறவுத் துறை அமைச்சர் அரரத் மிர்சோயன் உடனான சந்திப்பின் போது பேசிய அவர், இருநாடுகளுக்கும் இடையே இருதரப்பு வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு, ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார். நிகழ்ச்சியில், மருத்துவ பொருட்கள் ஒழுங்குமுறைத் துறையில் ஒத்துழைப்பிற்காக இந்தியா ஆர்மேனியாவுடன் ஒரு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவிற்கு அதிகாரப்பூர்வ வருகைத் தந்தபோது தனக்கும், தனது குழுவினருக்கும் அளிக்கப்பட்ட அன்பான வரவேற்புக்காக, ஆர்மேனியா வெளியுறவு அமைச்சர் திரு. அரரத் மிர்சோயன், டாக்டர் ஜெய்சங்கருக்கு நன்றி தெரிவித்தார்.

---------------------------

*நாடாளுமன்றம் அஷ்வினி வைஷ்ணவ் 1(10)*

நாடாளுமன்ற மாநிலங்களவையில் ரயில்வே சட்டத் திருத்த மசோதாவை மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் நாடாளுமன்ற மாநிலங்களவையில் இன்று தாக்கல் செய்தார். அப்போது பேசிய அவர், ரயில்வேயில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், மற்றும் வசதிகள் குறித்து எடுத்துரைத்தார். பைலட்டுகளுக்கு உலக தரத்திலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். ரயில்வே துறையின் வளர்ச்சிக்காக 3 லட்சத்து 10 ஆயிரம் கழிப்பறைகள் கட்டப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். 45ஆயிரம் கிலோ மீட்டர் ரயில் பாதை, மின்மயமாக்கப் பட்டுள்ளதாகவும், 34 ஆயிரம் கிலோ மீட்டருக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்க்ப பட்டுள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தமது உரையில் தெரிவித்தார்.

---------------------------

*நாடாளுமன்றம் தர்மேந்திர பிரதான் 2 (7)*

தமிழக எம்பிக்கள் குறித்து மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் பேசியது அவை குறிப்பில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக மக்களவை செயலகம் தெரிவித்துள்ளது. மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் நேற்று நாடாளுமன்றத்தில், மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் பேசினார். அப்போது தமிழ்நாடு எம்பிக்கள் குறித்து அவர் பேசியது சர்ச்சையானது. தமிழகத்தில் எதிர்மறைகளை ஏற்படுத்தி உள்ள இந்த பேச்சு மக்களவை குறிப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

----------------------------

*ஷிவ்ராஜ் சிங் (18)*

மத்திய அரசு வேளாண் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடுபட்டு வருவதாக, வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். முக்கிய விவசாய பயிர்கள் குறித்த தரவுகளை வெளியிட்டு பேசிய அவர், 2024-25ஆம் ஆண்டிற்கான முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்திக்கான 2ஆவது முன்கூட்டிய மதிப்பீடுகளை வேளாண் மற்றும் விவசாயிகள் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட காரீப் உணவு தாணிய உற்பத்தி, தோராயமாக 664 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது. அதே நேரத்தில் ராபி உணவு தானிய உற்பத்தி 645 மெட்ரிக் டன்னை தாண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. காரீப் அரிசி உற்பத்தி, ஆயிரத்த 206 மெட்ரிக் டன்களுக்கும் அதிகமாக இருக்கும் என்றும், மதிப்பிடப் பட்டுள்ளது. இது, 2023-24ஆம் ஆண்டில் சுமார் ஆயிரத்த 132 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. துவரம் பருப்பு

மற்றும் பருப்பு உற்பத்தி முறையே 35.11 லட்சம் மெட்ரிக் டன் மற்றும் 115.35 லட்சம் மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், விவசாயத் துறையின் வளர்ச்சியை நோக்கி மத்திய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாக கூறினார். இதன் விளைவாக விவசாய பயிர் உற்பத்தியில் சாதனை படைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

----------------------------

இ-ஷரம் (15)

இ-ஷ்ரம் போர்ட்டலில், 30 கோடியே 68 லட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களின் விரிவான தேசிய தரவு தளத்தை உருவாக்குவதற்காக இந்த போர்ட்டல் கடந்த 2021ஆம் அஆண்டு தொடங்கப்பட்டது. மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்து பேசிய மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாயப்புத் துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த்லாஜே, மொத்தம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில் 53 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதுவரை பல்வேறு மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இ-ஷ்ரம் திட்டங்கள் ஏற்கனவே ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதாகவும், இதில், பிரதமரின் ஸ்வாநிதி, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதான் மந்திர ஜீவன் ஜோதி பீமா யோஜனா, பிரதான் மந்திரி ஆவாஜ் யோஜனா-கிராமின் மற்றும் ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய

யோஜனா ஆகிய திட்டங்களும் இணைக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------

*புதுச்சேரி பட்ஜெட் (5)*

புதுச்சேரி சட்டப் பேரவையில் 2025-26ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி நாளை தாக்கல் செய்ய உள்ளார். பட்ஜெட் தொகை 13 ஆயிரத்து 600 கோடியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் உரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*புதுச்சேரி சட்டசபை 1 (18)*

புதுச்சேரியில் பெஞ்சல் புயல் நிவாரணம் முழுமையாக வழங்கியதாக பேரவையில் பொய்யான தகவல் அளித்தாக கூறி, திமுக-காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவையில் இருந்து இன்று வெளிநடப்பு செய்தனர். புதுச்சேரியில் 15ஆவது சட்டப் பேரவையின் 6 ஆவது கூட்டத் தொடர், துணை நிலை ஆளுநர் உரையுடன் நேற்று தொடங்கியது. இக்கூட்டத் தொடரின் 2ஆவது நாளான இன்று, துணை நிலை ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது. அப்போது பல உறுப்பினர்கள், பெஞ்சால் புயலில் வீடு இழந்தவர்களுக்கு முழுமையாக நிவாரணம் வழங்கவில்லை என்று குற்றச்சாட்டை முன் வைத்தனர். அப்போது குறுக்கிட்டு பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. சிவா, பெஞ்சால் புயலால் வீடுகளை இழந்து, தங்கள் வாழ்வாதாரத்தை

தொலைத்த மக்களுக்கு இதுவரை புதுச்சேரி அரசு முழுமையாக கணக்கெடுத்து நிவாரணம் வழங்காமல் அவர்களை வஞ்சித்துள்ளதாக குற்றம் சாட்டினார். இதுதொடர்பாக, அரசு இந்த சபையில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கூறினார். இதற்கு அரசு தரப்பில் இருந்து முறையான பதில் ஏதும் வராததால், எதிர்கட்சி தலைவர் திரு. சிவா தலைமையில் திமுக-காங்கிரஸ் உறுப்பினர்கள், பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டமன்ற



எதிர்கட்சி உறுப்பினர் திரு. சிவா, புதுச்சேரி அரசு கோரிய பேரிடர் நிதி 700 கோடி ரூபாய்க்கு, வெறும் 61 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு வழங்கி உள்ளதாக தெரிவித்தார். மேலும் புதுச்சேரி அரசு வழங்கிய நிவாரண நிதி, மற்ற துறைகளில் நலத்திட்டங்களுக்கு வைக்கப்பட்ட நிதி என்றும், இது, திசை திருப்பி விடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இதனால் நலத்திட்டங்கள் தேக்கமடைந்து உள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேப்போல், துணை நிலை ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது நடைபெற்ற விவாத்தில் பங்கேற்று பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சிவா, காரைக்கால் பகுதியில், புயல் காலங்களில் வீடுகளை இழந்த குடும்பத்தினருக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். காரைக்காலில் தனது தொகுதியில், 250க்கும் மேற்பட்ட சிவப்பு ரேஷன் கார்டுகள், மஞ்சள் ரேஷன் கார்டுகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதனை உடனடியாக மீண்டும் சிவப்பு கார்டுகளாக மாற்றி வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும், படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெற தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

----------------------------

*ஜிப்மர் (6)*

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவு, வருகிற வெள்ளிக் கிழமை 14ஆம் தேதி ஹோலிப் பண்டிகையை முன்னிட்டு இயங்காது என்று, ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குநர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த தேதியில், நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்க வேண்டும் என்றும், அன்றைய தினம், அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

2 நாள் அரசு முறைப் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மொரீஷியஸ் நாட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

பஞ்சாப் மத்திய பல்கலைக் கழகம், இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களின் சங்கமம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப் பேரவையில் 2025-26ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி நாளை தாக்கல் செய்ய உள்ளார்.

புதுச்சேரியில் பெஞ்சல் புயல் நிவாரணம் முழுமையாக வழங்கியதாக பேரவையில் பொய்யான தகவல் அளித்தாக கூறி, திமுக-காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவையில் இருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.